30.01.2019.அ.வ.எண்.83/2005

பி.வா.சா.1 குணசேகரன்

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் பி.எஸ.சி. மைக்ரோ பையாலஜி படித்துள்ளேன். நான் கள்ளிக்குப்பம் பெருமாள் கோவில் தெரு, கதவு எண்.43 குடியிருந்து வருகின்றேன் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியான எனது தந்தை எவ்வளாவு வருடங்களாக அந்த விவாசத்தில் குடியிருந்து வந்தார் என்றால் அவரது திருமணத்திற்கு முன்பிருந்தே குடியிருந்து வந்தார். தாவா சொத்து கொரட்டூல் கிராமம் புல எண்.705/4ல் அமைந்துள்ளது. தாவா சொத்து மேற்கு பாலாஜி தெரு 5வது விரிவாக்கத்தில் அமைந்துள்ளது. தாவா சொத்திற்கு வடக்கில் காலி மனையும் தெற்கில் 24 அடி சாலையும் கிழக்கில் சம்மந்தம் என்பவரின் காலி மனையும் மேற்கில் வாதியின் வீடும் அமைந்துள்ளது. தெற்கு பக்கத்தில் எவ்வளவு அடி நீளம் கொண்ட சொத்து எங்களுடையது என்றால் 26 அடி நீளமாகும். அதுபோல் வடக்கு பக்கம் 26 அடியும் கிழக்கு மற்றும் மேற்கில் தலா 91 அடி கொண்டாகும். அ.வ.எண்.424/2006 என்ற வழக்கினை தாவா சொத்தான எங்களுடைய சொத்தில் உள்ளே சென்ற முயன்றபொழுது அவ்வழக்கின் பிரதிவாதி ஆட்சேபனை தெரிவித்த காரணத்தினால் அதனை தாக்கல் செய்துள்ளோம். இவ்வழக்கின் வாதி அ.வ.எண்.83/2005 என்ற வழக்கில் 2 பட்டிகை சொத்துக்களை காட்டியுள்ளார். அ பட்டிகை சொத்து வாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தாகும். பி பட்டிகை சொத்தானது எங்களுடைய சொத்தை வாதி அவருடைய சொத்தாக காட்டி அவருடைய சொத்துடன் சேர்த்து வைத்துள்ளார். வாதியின் கணவரின் பெயர் சுப்பிரமணி தமிழ் ஆசிரியர் என்றால் சரிதான். இவ்வழககில் தாக்கல் செய்த அவ.எண்.83/2005 என்ற வழக்கை வாதி முதலில் என்னுடைய தந்தையின் பெயரில் தான் தாக்கல் செய்திருந்தார் என்றும் அவ.எண்.424/2006 என்ற வழக்கில் என்னுடைய தந்தையும் தாயாரும் சேர்ந்து தாக்கல் செய்திருந்தார்கள் என்றும் அதன் காரணமாக அந்த வழக்கின் விவரங்கள் எனக்கு தெரியமா என்றால் தெரியும். தாவா சொத்தில் உள்ள எங்களுடைய வீட்டை வாதி ஆக்கிரமித்து கொண்டு அடியாட்களுடன் எங்களை உள்ளே நுழைய விடாமல் 2015 ஆம் ஆண்டு தடுத்தார். அ.வ.எண்.424/2006 வழக்கினை நாங்கள் தாக்கல் செய்த பொழுது தாவா சொத்தில் ஒரு கொட்டகை வீடும் மீதமுள்ள இடம் காலி இடமாக இருந்தது.

எங்களுடைய பிராதில் சொத்து பட்டியலில் எங்களுடைய சொத்தை காலி இடமாக தான் காட்டியுள்ளோம் என்றும் கொட்டகை இருந்த விவரத்தை குறிப்பிடாததற்கு எதாவது காரணம் உள்ளதாக என்றால் சிதிலமடைந்த காரணத்தினால் அந்த கொட்டகை இருந்ததை காட்டவில்லை. நாங்கள் அம்பத்தூர் கள்ளிகுப்பத்தில் தான் குடியிருந்து வருகின்றோம் என்றால் தாவா பி பட்டிகை சொத்தில் எப்பொழுதும் குடியிருந்து வரவில்லை என்றால் சரிதான். தாவா பி பட்டிகை சொத்தில் கடைசியாக எப்பொழுது சென்று பார்த்ததேன் என்றால் அடிக்கடி பார்த்து வருகின்றேன். பி பட்டிகை சொத்திற்குள் எங்களால் சென்று வர முடியுமா என்றால் முடியாது எங்களுக்குரிய வழி இடத்தை மறைத்து வாதி மதில் சுவர் கட்டிக்கொண்டார். தற்பொழுது அ பட்டிகை சொத்தின் வழியாக தான் பி பட்டிகை சொத்திற்குள் செல்ல முடியும் என்றால் சரிதான். எங்களுடைய சொத்தின் 26 அடி நீளத்திலும் வாதி மதில் சுவர் கட்டியுள்ளார் என்றால் நாங்கள் போட்டிருந்த முள்வேலியை அப்புறப்படுத்தி மதில் சுவர் கட்டியுள்ளார். முள்வேலி எப்பொழுது அங்கு இருந்தது என்றால் 2005 ஆம் ஆண்டு நாங்கள் வழக்கு தாக்கல் செய்திருந்தபொழுது அங்கிருந்தது. பி பட்டிகை சொத்தில் உள்ள முள்வேலியை அகற்றி எப்பொழுது வாதி மதில் சுவர் கட்டினார் என்றால் 2015 ஆண்டு கட்டினார். அ பட்டிகை சொத்தில் உள்ள வீட்டிலிருந்த மின் இணைப்பு தாவா பி பட்டிகை சொத்தில் உள் வீட்டிற்கு எடுத்துச்செல்லப்படுகிறது என்றால் சரிதான். பி பட்டிகை சொத்தில் உள்ள வீடு ஆஸ்பேஸ்டால் சீட் வேயப்பட்டதாகும். அது சுமார் 10க்கு 10 சதுர அடி இடம் கொண்ட வீடாகும். பி பட்டிகை சொத்தில் உள்ள அந்த வீட்டை வாதி வாடகைக்கு விட்டுள்ளார் என்றால் சரியல்ல. அது பூட்டப்பட்டுள்ளது. பி பட்டிகை சொத்தில் 100 சதுர அடி கொண்ட வீட்டை தவிர மீதமுள்ள இடத்தை வாதி மரங்கள் நட்டு பராமரித்து வருகின்றார் என்றால் சரியல்ல. அது எங்களுடைய அனுபவத்தில் தான் இருந்து வருகின்றது. கடைசியாக நான் எப்பொழுது பி பட்டிகை சொத்திற்குள் சென்று பார்வையிட்டேன் என்றால் ஒரு மாத காலத்திற்கு முன்பு பார்வையிட்டேன். பி பட்டிகை சொத்தில் உள்ள வீடு 2005 ஆம் ஆண்டிலிருந்து உள்ளது என்றால் சரியல்ல. 2015 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் தான் நாங்கள் கட்டினோம். எவ்வளவு மாத காலம் அந்த வீட்டை கட்டி முடிக்க ஆனது என்றால் இரண்டு மாத காலமானது. அப்பொழுது எங்களது சொத்திற்குள் செல்ல வேலி உள்ளது அந்த வழியாக தான் நாங்கள் சென்று கட்டிடம் கட்டினோம். கட்டிடம்

கட்டியபொழுது வாதி ஆட்சேபனை எதுவும் தெரிவித்தாரா என்றால் இல்லை. பி பட்டிகை சொத்தில் உள்ள கட்டிடத்தை கட்டும்பொழுது அதற்குரிய மூலப்பொருட்களை வாங்கியதற்கான ரசீதுகள் என்னிடம் உள்ளதா என்றால் இல்லை. ஆனால் சிறிது சிறிதாக எங்களுடைய சேமிப்பை கொண்டு நாங்கள் கடையில் வாங்கி கட்டிடத்தை கட்டினோம். எங்களுடைய திருத்தம் செய்யப்பட்ட அ.வ.எண்.424/2006ல் பிராதில் இவ்வழக்கின் வாதி கட்டிடம் கட்டியதாக சொல்லியுள்ள விவரம் தவறு என்றால் சரிதான். கட்டிடத்தை நாங்கள் தான் கட்டினோம். தாவா பி பட்டிடகை சொத்தில் உள்ள 150 சதுர அடி கட்டிடம் 2015 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் எங்களால் கட்டடப்பட்டது. 2006 ஆம் ஆண்டு அ.வ.எண்.424/2006 என்ற வழக்கை தாக்கல் செய்தவற்கு முன்பாக யார் எங்களுக்கு தொந்தரவு கொடுத்தார்கள் என்றால் இவ்வழக்கு வாதியின் வீட்டார்கள் தான் எங்களுக்கு தொந்தரவு கொடுத்தார்கள். அப்பொழுது நான் அங்கு செல்லவில்லை என்னுடைய தந்தைக்கு தான் அந்த விவரம் தெரியும். என்னுடைய தந்தை 2008 ஆம் ஆண்டு காலமானார். என்னுடைய தந்தையின் இறப்பிற்கு பின்னர் இது நாள் வரை வாதி என்னை நேரிடையாக மிரட்டி தொந்தரவு கொடுத்தாரா என்றால் இல்லை அவருடைய ஆட்கள் தான் என்னை தொந்தரவு கொடுத்தார்கள்.

(வாதியின் வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)